காமராஜர் பிறந்தநாளையொட்டி

ஊழல், லஞ்சத்துக்கு எதிராக கைரேகை பதிவு இயக்கம்

▶ கோவை மாவட்ட காங்கிரஸ் சார்பில் காமராஜர் பிறந்த நாளை முன்னிட்டு ஊழல் மற்றும் லஞ்சத்துக்கு எதிராக கோவை சிவானந்தா காலனியில் மாநில பொதுச்செயலாளர் கணபதி சிவக்குமார் தலைமையில் கைரேகை பதிவு இயக்கம் நேற்று முன்தினம் துவங்கியது.

கோவை, ஜூலை 17: கோவை மாவட்ட காங்கிரஸ் சார்பில் காமராஜர் பிறந்த நாளை முன்னிட்டு ஊழல் மற்றும் லஞ்சத்துக்கு எதிராக கைரேகை இயக்கம் கோவை சிவானந்தாகாலனியில் நேற்று முன்தினம் துவங்கியது.

இதை, மாநில பொதுச் செயலாளர் கணபதி சிவக்குமார் தலைமை தாங்கி துவக்கி வைத்தார். பின்னர் அவர் பேசுகையில், "லஞ்சம் தவிர், நெஞ்சம் நிமிர் என்னும் கொள்கையை காங்கிரஸ் கட்சி சார்பில் காமராஜரின் பிறந்த நாளையொட்டி, வெள்ளை நிறத்தில் கைரேகை பதிவிட்டு உறுதி செய்யும் நிகழ்ச்சி தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் மாணிக்கம் தாகூர் வழிகாட்டுதலின்படி துவங்கியுள்ளது" என்றார்.

நிகழ்ச்சிக்கு, முன்னாள் மாவட்ட தலைவர் வக்கீல் கருப்புசாமி, வீனஸ் மணி, தாமஸ் வர்க்கீஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர், நிகழ்ச்சியில், காங்கிரஸ் நிர்வாகிகள் அனீஸ், ஷேக்முகமது, கணேசன், முருகன், ராமன், அஸ்மத்துல்லா, நாராயணன், மோசஸ் லியோ, ரமேஷ், முருகவேல், பூபதி, சகாயம், முத்துசாமி செட்டியார், ராமகிருஷ்ணன், சின்னசாமி, ஜெகதீஸ், தினகரன், சண்முகசுந்தரம், பூபதி, காட்டூர் தம்பு, தீபக், பாலமுருகன், பால்ராஜ், முருகராஜ், ரிஸ்வான் ஷெரீப், திலகவதி, பெலிக்ஸ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

காமராஜர் பிறந்தநாளில்

500 பெண்களுக்கு இலவச சேலை

▶ கோவை வடக்கு மாவட்ட இளைஞர் காங்கிரஸ் சார்பில், காமராஜர் 124வது பிறந்தநாள் விழா கோவை லாலி ரோடு பகுதியில் நேற்று முன்தினம் நடந்தது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட தலைவர் எம்.ஆகாஷ் தலைமை தாங்கி, 500 பெண்களுக்கு இலவசமாக சேலை வழங்கினார்.

கோவை, ஜூலை 17: கோவை வடக்கு மாவட்ட இளைஞர் காங்கிரஸ் சார்பில், காமராஜர் 124வது பிறந்த நாள் விழா கோவை லாலி ரோடு பகுதியில் நேற்று முன்தினம் நடந்தது.

மாவட்ட தலைவர் எம். ஆகாஷ் தலைமை தாங்கி, 500 பெண்களுக்கு இலவசமாக சேலை வழங்கினார். நிகழ்ச்சிக்கு, அகில இந்திய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் வி.எம்.சி.மனோகரன், அகில இந்திய இளைஞர் காங்கிரஸ் செயலாளர் ஷிபினா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில், மாவட்ட துணை தலைவர் லாலி ரோடு செல்வம், இளைஞர் காங்கிரஸ் மாநில பொதுச் செயலாளர் அபுதாகீர், அருண்குமார், சச்சிதானந்தம், அர்ஜுன், பாபு, இந்துராஜ், கோகுலகிருஷ்ணன், கோகுல், சவுந்தர், ரமேஷ்குமார், கபிலன், அப்பாஸ், நோபல், ஹாரிஸ், சரவணகுமார், ரவிச்சந்திரன், ராஜ்குமார், கண்ணன், சைத்யா, கிருத்திக், பாலசுப்பிரமணியன், பாலாஜி, வரதராஜ், அமரேசன், காகான், செந்தில், சக்திசதீஷ், செல்வபுரம் ஆனந்த், விஜிபி.நடராஜ், ரங்கசாமி, தாவூத்அலி, பொன்ராஜ், ரபீக், காயத்ரி, சோமணி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

பவானிசாகர் நீர்த்தேக்க பகுதியில்

வண்டல் மண் எடுக்கும் பணிகளை செக்போஸ்ட் அமைத்து கண்காணிப்பு

▶ சோதனைச்சாவடியில் வண்டல் மண் ஏற்றிச்செல்லும் வாகனங்கள் கண்காணிக்கப்படுகிறது. அடுத்த படம்: வண்டல் மண் எடுக்கும் பகுதி, சோதனைச்சாவடி பகுதியில் கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்டுள்ளது.

தினகரன் செய்தி எதிரொலி

அதிகாரிகள் நடவடிக்கை

மேட்டுப்பாளையம், ஜூலை 17: 'தினகரன்' செய்தி எதிரொலியாக பவானிசாகர் நீர்த்தேக்க பகுதியில் வண்டல் மண் எடுக்கும் பணிகளை செக்போஸ்ட் அமைத்து தீவிரமாக கண்காணிக்க அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

மேட்டுப்பாளையம் அடுத்துள்ள சிறுமுகை மற்றும் அதன் சுற்றுவட்டாரத்தில் உள்ள பவானிசாகர் நீர்த்தேக்க பகுதியில் விவசாயிகள் வண்டல் மண் எடுத்துக்கொள்ள தமிழக அரசு அண்மையில் அனுமதி வழங்கியது. பவானிசாகர் நீர்த்தேக்க பகுதியில் உள்ள வண்டல் மண் தாதுச்சத்துக்கள் அதிகம் உள்ளதால் இதனை விவசாயிகள் தங்களது ஆவணங்களை கொடுத்து எடுத்துச் செல்கின்றனர். இதனை தொடர்ந்து வருவாய்த்துறையினரிடம் விவசாயிகள் தங்களது நிலத்திற்குரிய பட்டா மற்றும் சிட்டா நகல்களை கொடுத்து உரிய அனுமதி பெற்று நீர் தேக்கப்பகுதிகளான லிங்காபுரம், பெத்திக்குட்டை, புதுக்காடு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் விவசாயிகள் லாரிகள் மூலமாக வண்டல் மண் எடுத்து வருகின்றனர். இதில் விவசாயிகள் கொடுத்துள்ள ஆவணத்தின்படி அரசால் எத்தனை அடி வண்டல் மண் எடுக்கலாம் என அனுமதியளித்த பின்னர், வண்டல் மண் எடுக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் விவசாயிகள் என்ற போர்வையில் விவசாயிகளிடமிருந்து பெற்ற ஆவணங்களை பயன்படுத்தி சிலர் சட்ட விரோதமாக அனுமதிக்கப்பட்ட அளவை விட அதிகளவில் வண்டல் மண் எடுத்து அதனை ரியல் எஸ்டேட் நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு அதிக விலைக்கு விற்பனை செய்வதாக புகார் எழுந்தது. மேலும், வண்டல் மண் ஏற்றி செல்லும் லாரிகள் குறிப்பிட்ட நேரத்தை தாண்டி இயக்கப்படுவதாகவும், லாரிகளால் எழும் புழுதியால் பொதுமக்கள் பாதிக்கப்படுவதாகவும், பள்ளி, கல்லூரி மாணவர்கள் அச்சமடைந்துள்ளதாகவும், அதிக லோடு ஏற்றி வரும் வாகனங்களால் சாலைகள் சேதமடைவதாகவும் புகார் எழுந்தது.

இதுகுறித்து 'தினகரன்' நாளிதழில் இம்மாதம் 6 ம் தேதி செய்தி வெளியானது. இதனை தொடர்ந்து அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுத்து தங்களது கண்காணிப்பு பணியை தீவிரப்படுத்தியுள்ளனர். அதன்படி சிறுமுகையை அடுத்துள்ள லிங்காபுரம், பெத்திக்குட்டை, புதுக்காடு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து வண்டல் மண் எடுத்து வரும் லாரிகள் கோவில் மேடு என்ற பகுதி வழியாக வெளியே வர அனுமதிக்கப்பட்டுள்ளது. லாரிகள் வெளியே வரும் இடத்தில் காவல்துறை, வனத்துறை, வருவாய்த்துறை, பொதுப்பணித்துறை சார்பில் தற்காலிகமாக சோதனைச்சாவடி அமைக்கப்பட்டுள்ளது.

இந்த சோதனைச்சாவடியில் ஒவ்வொரு துறையிலும் தலா ஒருவர் என 4 பேர் வண்டல் மண் எடுத்து வரும் வாகனங்கள் உரிய பெர்மிட் உடன் இயங்குகிறதா? அனுமதிக்கப்பட்ட அளவு லாரிகளில் வண்டல் மண் ஏற்றப்படுகிறதா? என்பதை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும், வருவாய்த்துறை அதிகாரிகள் மூலம் பவானிசாகர் நீர்த்தேக்க பகுதியில் எடுக்கப்படும் வண்டல் மண் வெளி நபர்களுக்கு விற்பனை செய்யப்படுகிறதா? என்பதையும் தொடர்ந்து ரோந்துப்பணியின் மூலம் கண்காணிக்கப்பட்டு வருகிறது. இதேபோல் வண்டல் மண் எடுக்கும் இடங்கள், சோதனைச்சாவடி உள்ளிட்ட இடங்களில் கேமராக்கள் பொருத்தப்பட்டும் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

இதுகுறித்து வருவாய்த்துறையினர் கூறுகையில், "அரசு விதிமுறைகளின்படி காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை மட்டுமே வண்டல் மண் எடுத்துச்செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி காலை 9 மணி வரை லாரிகளில் வண்டல் மண் ஏற்றப்பட்டு பள்ளி, கல்லூரி செல்லும் மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு இடையூறு இல்லாமல் இருக்கும் வகையில் 10 மணிக்கு பின்னரே வாகனங்கள் வெளியே செல்ல அனுமதிக்கப்பட்டு வருகிறது" என தெரிவித்தனர்.

நிழல் திட்டம் குறித்து

பள்ளிகளில் போலீசார் விழிப்புணர்வு

▶ நிழல் திட்டம் குறித்து மேட்டுப்பாளையம் பள்ளிகளில் போலீசார் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

மேட்டுப்பாளையம், ஜூலை 17: நிழல் திட்டம் குறித்து பள்ளிகளிலும் பொதுமக்களிடமும் மேட்டுப்பாளையம் போலீசார் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றனர்.

கோவை மாவட்டத்தில் பொதுமக்களின் பாதுகாப்பை வலுப்படுத்தவும், தடுப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தவும், அவசர காலங்களில் போலீசாரின் சேவையை பொதுமக்களிடையே விரைவாக கொண்டுசேர்க்கவும் 'நிழல் பாதுகாப்பான சமூகத்திற்காக ஒன்றிணைவோம்' என்னும் க்யூஆர் கோடு அடிப்படையிலான நவீன பாதுகாப்பு திட்டத்தை அண்மையில் கோவை கலெக்டர் பவன்குமார், எஸ்பி பவன்குமார் முன்னிலையில் துவக்கி வைத்தார்.

இந்த திட்டம் குறித்து எஸ்பி பவன்குமார் பொதுமக்களிடையே போதிய விழிப்புணர்வை ஏற்படுத்த புறநகர் காவல் நிலையங்களுக்கு அறிவுறுத்தி இருந்தார். அதன்படி மேட்டுப்பாளையம் காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் உள்ள ரேஷன் கடைகள், பேருந்து நிலையங்கள், பள்ளி, கல்லூரிகள் உள்ளிட்ட பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் அதிகம் கூடும் இடங்களில் இந்த நிழல் திட்டம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் துண்டு நோட்டீசுகளை ஒட்டி பொதுமக்களிடையே போலீசார் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றனர்.

அப்போது, இந்த கியூஆர் கோடு எவ்வாறு ஸ்கேன் செய்ய வேண்டும்? இதன் மூலம் தங்களது அடையாளங்களை வெளிப்படுத்தாமல் முக்கிய தகவல்களை எவ்வாறு பகிர்ந்து கொள்வது? என்பது குறித்து பொதுமக்கள் மற்றும் பள்ளி, கல்லூரி மாணவர்களிடையே நேற்று விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

மேலும், இந்த செயலி மூலம் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகள் மற்றும் குற்றச்சம்பவங்கள், போதைப்பொருட்கள் கடத்தல் மற்றும் விற்பனை, சந்தேகத்திற்குரிய நபர்கள் நடமாட்டம் குறித்த தகவல்களை போலீசாருக்கு தெரிவித்து அதன் மூலம் உரிய நடவடிக்கை உடனுக்குடன் எடுக்க முடியும். எனவே, இந்த செயலியை பொதுமக்கள், பள்ளி, கல்லூரி மாணவர்கள் அதிகம் பயன்படுத்த வேண்டும் என கேட்டுக்கொண்டனர்.

பெண்கள் வன்கொடுமை புகார் அதிகரிப்பு

கோவை, ஜூலை 17: கோவை மாநகர், புறநகரில் பெண்கள் மீதான தாக்குதல், வன்முறை புகார்கள் அதிகமாகி விட்டது. தினமும் 181 என்ற பெண்கள் உதவி மையத்திற்கு புகார்கள் குவிகிறது.

குடும்பத்தினர் மட்டுமின்றி அக்கம் பக்கத்தினர் பெண்களிடம் தகராறு செய்வது, தாக்குதல் நடத்துவதாகவும் புகார்கள் குவிந்து வருகிறது. இடம், சொத்து பிரச்னை தொடர்பாகவும் பெண்கள் மீது தாக்குதல் நடத்தப்படுவதாக தெரிகிறது.

கோவை மாவட்டத்தில் சமூக நலத்துறையில் கடந்த ஆண்டில் 1270 புகார்கள் பெறப்பட்டது. நடப்பாண்டில் இதுவரை 800க்கும் மேற்பட்ட புகார்கள் பெறப்பட்டிருக்கிறது. குடும்ப பிரச்னையால் குறிப்பாக கணவர் தொந்தரவினால் பெண்கள் தவிப்பதாக புகார்கள் வருகிறது. இந்த புகார்களின் பேரில் ஒன் ஸ்டாப் சென்டரில் சமூக நலத்துறையினர் கவுன்சிலிங் தருகின்றனர். கோவை மாவட்டத்தில் கோவை, பொள்ளாச்சியில் மட்டும் ஒன் ஸ்டாப் சென்டர் செயல்பட்டது. தற்போது கூடுதலாக தொண்டாமுத்தூர், மேட்டுப்பாளையம் பகுதியில் ஒன் ஸ்டாப் சென்டர் துவக்கப்பட்டது.

இதில் மேட்டுப்பாளையத்தில் பெண்கள் அதிகளவு புகார் தருவதாக தெரியவந்துள்ளது. குடும்ப வன்முறை, வரதட்சணை டார்ச்சர் சமீப காலமாக அதிகமாகி விட்டது. கணவர், மனைவி பிரிவு விவகாரங்களில் சமூக நலத்துறையினர் தலையிட்டு தீர்வு காண முடியாமல் தவிக்கின்றனர்.

மோட்டார் பைக்கில் இருந்து தவறி விழுந்து தனியார் ஊழியர் பலி

மேட்டுப்பாளையம், ஜூலை 17: மேட்டுப்பாளையம் அடுத்து உள்ள தேக்கம்பட்டி பகுதியை சேர்ந்தவர் வெள்ளியங்கிரி(45). இவரது மனைவி ஜெயந்தி (43). தம்பதிக்கு சிபி ராகவன் (18) என்ற மகன் உள்ளார். சிபி ராகவன் மேட்டுப்பாளையம் தனியார் நிறுவன ஊழியராகவும், கேட்டரிங் பகுதி நேர ஊழியராகவும் பணிபுரிந்து வருகிறார். இவர் கடந்த 14 ம் தேதி இரவு கேட்டரிங் வேலைக்கு சென்று விட்டு மறுநாள் காலை மேட்டுப்பாளையத்தில் இருந்து வீட்டுக்கு தனது மோட்டார் பைக்கில் கிளம்பியுள்ளார்.

சமயபுரம் அருகே சென்று கொண்டிருந்த போது எதிர்பாராத விதமாக நிலைதடுமாறி மோட்டார் பைக்கில் இருந்து தவறி கீழே விழுந்ததில் படுகாயம் அடைந்துள்ளார். அக்கம்பக்கத்தினர் அவரை மீட்டு மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவருக்கு முதலுதவிக்கு பின்னர் மேல்சிகிச்சைக்காக கோவை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில் நேற்று அதிகாலை சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தார். இச்சம்பவம் குறித்து மேட்டுப்பாளையம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

பீட்சா கடையில் தீ விபத்து

▶ கோவை அவிநாசி சாலை பீளமேடு பகுதியில் உள்ள பிரபல தனியார் உணவகத்தில் நேற்று மின் கசிவால் தீப்பற்றியதில், பொருட்கள் எரிந்து நாசமானது.

கோவை, ஜூலை 17: கோவை பீளமேட்டில் பீட்சா கடை செயல்பட்டு வருகிறது. அந்த கடையில் நேற்று முன்தினம் இரவு ஊழியர்கள் பணியை முடித்து கடையை பூட்டி சென்றனர்.

இந்த நிலையில், நேற்று காலை 6.30 மணியளவில் கடையில் இருந்து கரும்புகை வெளியேறியுள்ளது. சிறிது நேரத்தில் கடை தீப்பிடித்து எரிய தொடங்கியது.

இதைக் கண்டு அதிர்ச்சி அடைந்த அந்த வழியாக சென்றவர்கள் உடனே தீயணைப்பு துறையினருக்கு தகவல் தெரிவித்தனர். தகவலின் பேரில் பீளமேடு தீயணைப்பு துறை வீரர்கள், நிலைய அலுவலர் பாலசுப்பிரமணியம் தலைமையில் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்தனர். அவர்கள் தண்ணீரை பீச்சி அடித்து தீயை கட்டுக்குள் கொண்டு வந்து அணைத்தனர்.

இந்த தீவிபத்தில் கடையில் இருந்த அனைத்து பொருட்களும் எரிந்து நாசமானது. இதுகுறித்து பீளமேடு போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தினர். முதற்கட்ட விசாரணையில் மின் கசிவின் காரணமாக தீவிபத்து ஏற்பட்டது தெரிய வந்துள்ளது.

தொடர்ந்து போலீசார் விசாரித்து வருகின்றனர்.

PDM
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கோயமுத்தூர்
OS.No. 271/2026

பாரத ஸ்டேட் வங்கி
Retail Assets Central processing center [RACPC] ...வாதி

/எதிராக/

1.செல்வ லட்சுமி, த/பெ.ரவி
கதவு நெ.21/7, லோட்டஸ் கார்னர் 3வது வீதி, நாராயணசாமி நகர், தெலுங்குபாளையம், கோயமுத்தூர் - 39
2.செல்வராணி, க/பெ.ரவி
கதவு நெ.21/7, லோட்டஸ் கார்னர் 3வது வீதி, நாராயணசாமி நகர், தெலுங்குபாளையம், கோயமுத்தூர் - 39
...பிரதிவாதிகள்

பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு

மேற்படி பிரதிவாதிகள் வாதி வங்கியில் பெற்றுள்ள வாகன கடன் நிலுவை தொகை Rs.63,775/- மற்றும் பின் வட்டி சகிதம் வசூல் செய்ய வேண்டி வாதி வங்கி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள தாவா பிரதிவாதியின் வருகைக்காக எதிர்வரும் 31.07.2026-ம் தேதி வாய்தா போடப்பட்டுள்ளது. எனவே மேற்படி தேதியில் மேற்படி நீதிமன்றத்தில் காலை 10.00 மணிக்கு நேரிலோ வழக்கறிஞர் மூலமாகவோ பிரதிவாதி ஆஜராக தவறினால் மேற்படி தாவா ஒரு கட்சியாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.

உத்தரவின்படி
ஆர்.நாகராஜன், B.Sc.,B.L.,
வழக்கறிஞர், கோயமுத்தூர் - 641 018

நிடோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட்

(முன்னதாக எடெல்வீஸ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்று அறியப்பட்டது) பதிவு அலுவலகம்: 5 ஆவது தளம், டவர் 3, விங் B, கோஹினூர் சிட்டி மால், கோஹினூர் சிட்டி, கிரோல் சாலை, குர்லா (மேற்கு), மும்பை-400 070, பிராந்திய அலுவலகம்: எடெல்வீஸ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், எண்.19, 7ஆவது தளம், கோச்சார் டவர்ஸ், வெங்கடநாராயணா சாலை, தி.நகர், சென்னை-600 017.

மின்–ஏலம் – சட்டப்பூர்வ 15 நாட்கள் விற்பனை அறிவிப்பு

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 கீழ் மின்–ஏலம் மூலம் விற்பனை.
இதன்மூலம் பொதுமக்களுக்குப் பொதுவாகவும் மேலும் கடன்தாரர் மற்றும் ஜாமீன்தாரர் ஆகியோருக்குக் குறிப்பிட்டும் வழங்கப்படும் அறிவிப்பாவது கீழ்க்குறிப்பிட்ட சொத்தானது இணைக்கப்பட்ட அட்டவணையில் குறிப்பிட்டவாறு கடன் நிலுவைகளை மீட்கும் வரை கீழ்க்குறிப்பிடுள்ள தொகையை மீட்பதற்காக "உள்ளது உள்ளவிடத்தில்", "உள்ளது உள்ளவாறு" மேலும் "உள்ளது எதுவோ அது" அடிப்படையில் விற்பனை செய்யப்பட உள்ளது. மேற்கூறிய சொத்தானது கடன்தாரர்(கள்), உப கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) மூலம் பெறப்பட்ட கடனுக்காக M/s. நிடோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட் (முன்னதாக எடெல்வீஸ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் ஆக அறியப்பட்டது) வசம் அடமானம் வைக்கப்பட்டுள்ளது. கடனீட்டுக் கடனீந்தோர் கீழ்க்குறிப்பிட்ட கடனீட்டுச் சொத்தின் அடையாளப்பூர்வ சுவாதீனம் கொண்டுள்ளார்.

வ. எண்.	கடன்தாரர்(கள்)/ உப கடன்தாரர்(கள்)/ ஜாமீன்தாரர்(கள்) பெயர்	மீட்கப்பட வேண்டிய தொகை	நிர்ணய விலை மற்றும் முன்வைப்பு தொகை	ஏலம் நாள் & நேரம்
3	வினோத்குமார் சுப்புராம் (கடன்தாரர்), கிருத்திகா MP (உப கடன்தாரர்)	14.07.2025 தேதியின்படி ரூ.16,57,728/– (ரூபாய் பதினாறு லட்சத்து ஐம்பத்தேழாயிரத்து எழுநூற்று இருபத்தெட்டு மட்டும்) மற்றும் ரூ.13,49,662/– (ரூபாய் பதின்மூன்று லட்சத்து நாற்பத்து ஒன்பதாயிரத்து அறுநூற்று அறுபத்திரண்டு மட்டும்) அதற்குரிய கூடுதல் வட்டி மற்றும் சட்டப்பூர்வ செலவினங்களும் உட்பட. கடன் கணக்கு எண்: L0690STHL000005338014 and L069STLAP000005338021.	நிர்ணய விலை: ரூ.27,76,455/– (ரூபாய் இருபத்தேழு லட்சத்து எழுபத்து ஆறாயிரத்து நானூற்று ஐம்பத்தைந்து மட்டும்) (முன்வைப்புத்தொகை: 2,77,645/– (ரூபாய் இரண்டு லட்சத்து எழுபத்தேழாயிரத்து அறுநூற்று நாற்பத்து ஐந்து மட்டும்)	07–08–2026 காலை 11 மணி முதல் நண்பகல் 12 மணிக்குள் (5 நிமிடங்கள் வரம்பில்லா தன்னிச்சை நீட்டிப்புகளுடன்)

பார்வையிடும் நாள் & நேரம் 27-07-2026 காலை 11.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை | அடையாளப்பூர்வ சுவாதீனம் நாள்: 10-03-2026

கடனீட்டுச் சொத்து விவரம்: பழைய S.No.154, துணைப் பிரிவுக்குப் பிறகு புதிய S.No. 154/1, வருவாய் பதிவேட்டின் படி 154/1, கதவு எண்.(சொத்து வரியின்படி) 42, மனை எண்.74 ஒரு பகுதி நல்லூர் கிராமம், திருப்பூர் பதிவு மாவட்டம், நல்லூர் சார் பதிவு மாவட்டம், காமாட்சி நகர் 2 ஆவது தெரு, 640 ச.அடி பரப்பளவு உள்ள நிலத்தின் எல்லைகள்: வடக்கில்: 30 அடி அகல கிழக்கு மேற்கு சாலை, தெற்கில்: மனை எண்.28, கிழக்கில்: மனை எண்.73, மேற்கில்: மனை எண்.75, அளவீட்டு விவரங்கள்: கிழக்கு மேற்காக வடக்கில்: 32 அடி, கிழக்கு மேற்காக தெற்கில்: 32அடி, தெற்கு வடக்காக கிழக்கில்: 20 அடி, தெற்கு வடக்காக மேற்கில்: 20 அடி. மொத்தம் 640 ச.அடி பரப்பளவு உள்ள நிலத்துடன் அனைத்து பயன்பாட்டு உரிமைகள் மற்றும் பாதை உரிமைகள் உள்ள சொத்து.

குறிப்பு:– 1) ஏல விற்பனை https://sarfaesi.auctiontiger.net இணையதளம் வழியே இயங்குதளத்தில் நடத்தப்படும். மேலும் மதிப்புறு மின்னஞ்சல், அடையாளச் சான்று & நிழற்படச் சான்று, பான் அட்டை வைத்திருக்கும் மேலும் கேட்பு வரைவோலை/ NEFT/RTGS மூலம் முன்வைப்புத்தொகை பணப்பட்டுவாடா செலுத்தியிருக்கும் ஏலதாரர்கள் மட்டும் இந்த "இயங்குதள மின்–ஏலத்தில்" பங்கேற்க தகுதி பெறுவார்கள்.
2) திட்டமிடும் ஏலதாரர்கள் அவர்தம் முன்வைப்புத்தொகையை கேட்பு வரைவோலை/ RTGS/NEFT மூலம் செலுத்தும் முறையில் சமர்ப்பிக்க வேண்டும்: பயனாளி பெயர்: நிடோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட், வங்கி: ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, கணக்கு எண். 65226845199, சர்ஃபாசி–ஆக்சன், நிடோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட், IFSC குறியீடு: SBIN0001593.
3) முன்வைப்புத்தொகையுடன் ஏலப்புள்ளிப் படிவம் இயங்குதள விண்ணப்பம் சமர்ப்பிக்க கடைசி நாள்: 06–08–2026 ஆகும்.
4) விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, இணையதளம் https://sarfaesi.auctiontiger.net காணவும் அல்லது திரு. மௌலிக் ஸ்ரீமாலி தொலைபேசி +91–6351896643/9173528727, உதவியிணைப்பு மின்னஞ்சல் முகவரி: Support@auctiontiger.net தொடர்பு கொள்ளவும்.

கைபேசி எண். 9962784954/8667572466
நாள்: 17.07.2026
ஒம்/– அதிகாரப்பூர்வ அதிகாரி
நிடோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட்
(முன்னதாக எடெல்வீஸ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் ஆக அறியப்பட்டது)

க்ரிஹம் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்

பதிவு பெற்ற அலுவலகம்: 6 ஆவது தளம், B பில்டிங், கங்கா ட்ரினோ, லோஹேகான், புனே, மகாராஷ்டிரா-411014. கிளை அலுவலகம் அலகு: கிங்ஸ்டோன்பார்க் கமர்சியல் காம்ப்ளெக்ஸ், எண்.19/1, புதூர் நெடுஞ்சாலை, ராமலிங்க நகர், உறையூர், திருச்சி-620 017(தூநா)

மின்–ஏலம்– விற்பனை அறிவிப்பு
சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொத்து விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சட்டம்) மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8 மற்றும் 9 கீழ் அசையா சொத்துகளின் மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு.
இங்கே உள்ள அறிவிப்பின்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள்/ உப–கடன்தாரர்கள்/ அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளானது க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் இதற்குப் பிறகு சட்டத்தின்படி கடனீட்டு கடனீந்தோர் என்று குறிப்பிடப்படும்) அதிகாரப்பூர்வ அதிகாரியால், சட்டத்தின் பிரிவு 13 (12) இன் படியும், கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் விதிகள் 8 &9 இன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி சுவாதீனம் செய்யப்பட்டுள்ளது.
நிரல் (J) இல் குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டு சொத்துகள் அவை எங்கே உள்ளதோ, என்ன உள்ளதோ, எப்படி உள்ளதோ, அதே அடிப்படையில் மின்–ஏலம் மூலமாக 18.08.2026 தேதியன்று விற்பனை செய்யப்படும். இதன் மூலம் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், மின்– ஏல இயங்குதளத்தில் அதன் இணையதள லிங்க்கில் அதாவது, https://www.bankeauctions.com மூலமாக மின்–ஏலம் நடைபெறும். விற்பனையின் விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்,/கடனீட்டு கடனீந்தோரின் இணையதளம் அதாவது, www.grihumhousing.com– ஐ பார்வையிடவும்.

வ. எண்.	முன்மொழிவு எண். வாடிக்கையாளர் பெயர் (A)	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் நிலுவைத்தொகை (B)	சுவாதீன தன்மை (C)	சொத்தின் விவரம் (D)	நிர்ணய விலை (E)	முன்வைப்புத்தொகை (நிர்ணய விலையில் 10%)(F)	முன்வைப்புத் தொகை செலுத்தும் தேதி (G)	ஏல உயர்வுத் தொகை (H)	சொத்தை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் (I)	ஏலத் தேதி மற்றும் நேரம் (J)	தெரிந்த வில்லங்கங்கள் / நீதிமன்ற வழக்குகள் தெரிந்தது ஏதேனும் (K)
3	கடன் எண். LAP061020000000 5031955 மகேஷ்குமார் ரங்கசாமி (கடன்தாரர்), தனலட்சுமி மகேஷ்குமார் (உப கடன்தாரர்)	அறிவிப்பு தேதி: 09–10–2025 09–10–2025 தேதியின்படி ரூ. 9,87,739/– (ரூபாய் ஒன்பது லட்சத்து எண்பத்தேழாயிரத்து எழுநூற்று முப்பத்தொன்பது மட்டும்) அத்துடன் தொகை வசூலிக்கப்படும் வரை ஆண்டுக்கு 16.35% வட்டியும் சேரும்.	கையகம்	கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், பொள்ளாச்சி துணைப் பதிவு மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், சிங்காநல்லூர் கிராமம், சர்வே எண்.92/1a, மனை எண். 1, பர